605 / 4    Tamil Language/Paper 2 /Booklet A    Tamil/ SA2

**Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.**

**'அ' பிரிவு**

**A1 வேற்றுமை**

**Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q1. படித்து முடித்த பிறகு மாறன் ஒரு கடையில் ______________ சேர்ந்து பணம் சம்பாதித்தான்.

1. வேலையில்
2. வேலையால்
3. வேலையோடு
4. வேலையின்

Q2. முரளி தன் நண்பன் ______________ சந்திப்பதற்காக ஓர் ஊருக்குச் சென்றான்.

1. ஒருவனின்
2. ஒருவனை
3. ஒருவனுடன்
4. ஒருவனால்

Q3. நாம் ______________ மதித்து நடக்க வேண்டும் என்று ஔவையார் கூறுகிறார்.

1. மூத்தோரை
2. மூத்தோருடன்
3. மூத்தோரில்
4. மூத்தோருக்கு

Q4. கோபு தன் ______________ செந்தோசாவுக்குச் சென்றான்.

1. உறவினரோடு
2. உறவினரிடம்
3. உறவினரது
4. உறவினரை

Q5. வேட்டை நாய்களிடமிருந்து நரி எப்படியாவது தப்பிக்கவேண்டும் என்ற ______________ வேகமாக ஓடியது.

1. எண்ணத்தில்
2. எண்ணத்தை
3. எண்ணத்தின்
4. எண்ணத்திற்கு



More papers at www.testpapersfree.com

**A2 செய்யுள்/ பழமொழி**

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q6. இளமையில் கல்வி __________ எழுத்து.

1. நூலில்
2. மனதில்
3. சிலையில்
4. முதுமையில்

Q7. அறிஞர்க்கு அழகு __________ அடங்கல்.

1. பார்த்துணர்ந்து
2. கண்டறிந்து
3. படித்தறிந்து
4. கற்றுணர்ந்து

Q8. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே__________ சினம்.

1. கெடுக்கும்
2. எரிக்கும்
3. அழிக்கும்
4. கொல்லும்

Q9. எண்ணித் துணிக __________ துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

1. வேலை
2. கருமம்
3. செயல்
4. கடமை

Q10. ________________ அழகு முகத்தில் தெரியும்.

1. செயலின்
2. பேச்சின்
3. அகத்தின்
4. உள்ளத்தின்



More papers at www.testpapersfree.com

**A3 அடைமொழி / எச்சம்**

**Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி/ எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப்பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q11. சில விலங்குகள் பகலில் __________ இரவில் இரை தேடுகின்றன.

1. உறங்குகிற
2. உறங்கி
3. உறங்கும்
4. உறங்கிய

Q12. சிற்பியின் திறமையால் __________ கற்சிலை ஒன்று செதுக்கப்பட்டது.

1. அழகான
2. அழகாக
3. அழகாய்
4. அழகானது

Q13. விழாக்காலங்களில் பொருட்கள் __________ விலையில் விற்கப்படும்.

1. மலிவாக
2. மலிவான
3. மலிவை
4. மலிவாய்

Q14. ஆசிரியர் வகுப்பினுள் நுழைந்ததும் மாணவர்கள் __________ நின்றனர்.

1. எழு
2. எழுகிற
3. எழுந்து
4. எழுந்த

Q15. பாட்டுப் போட்டியில் வெற்றிப் __________ சங்கரி ஆனந்த வெள்ளத்தில் மிதந்தாள்.

1. பெற்ற
2. பெறுகின்ற
3. பெறும்
4. பெற



More papers at www.testpapersfree.com

**A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

மகிழ்மதி நாட்டை ஆணவம் கொண்ட மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் தன்னைவிட Q16 ________________ உலகில் யாருமே இல்லை என்று எண்ணினான். அவனிடம் மதிநுட்பமிக்க அமைச்சர் ஒருவர் இருந்தார். பலரும் அவரை அணுகி பிரச்சினைக்கு Q17 ________________ கண்டனர். இதைக் கண்ட அரசருக்குப் பொறாமையாக இருந்தது. மன்னன், அந்த அமைச்சரைப் பலர் முன்னிலையில் அவமானப்படுத்தும் Q18 ________________ எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தான்.

ஒருநாள் சபையில் அறிஞர்கள் கூடியிருந்தனர். அப்போது, அரசன் அமைச்சரிடம், "அமைச்சரே! திடீரென்று ஒரு தேவதை உன் முன் தோன்றி, உனக்கு அறிவு வேண்டுமா, செல்வம் வேண்டுமா, என்று கேட்டால் நீ எதைக் கேட்பாய்?" என்று Q19 ________________. அமைச்சர் உடனே, "நான் செல்வத்தைத்தான் கேட்பேன்," என்றார். அரசன், "அழியக் கூடிய செல்வத்தை விரும்பும் உனக்கும் அறிவுக்கும் வெகுதூரம் என்பதைக் காட்டிவிட்டாயே! நானாக இருந்தால் அறிவைத்தான் கேட்டு இருப்பேன்," என்றான் ஆணவத்துடன்.

அமைச்சர் மிகவும் அடக்கமாக, "யாரிடம் எது அறவே Q20 ________________ அதைத்தான் விரும்பிக் கேட்பார்கள்," என்றார். சபையிலிருந்தவர்கள் அதைக் கேட்டு நகைத்தார்கள். அரசன் அவமானத்தால் தலைகுனிந்தான்.



More papers at www.testpapersfree.com

Q16. 1. பலசாலி
2. அறிவாளி
3. உழைப்பாளி
4. அழகானவன்

Q17. 1. தீர்வு
2. பதில்
3. யோசனை
4. ஆலோசனை

Q18. 1. வழியை
2. தந்திரத்தை
3. தருணத்தை
4. எண்ணத்தை

Q19. 1. விசாரித்தான்
2. மொழிந்தான்
3. உரைத்தான்
4. வினவினான்

Q20. 1. இல்லையோ
2. உண்டோ
3. இருந்ததோ
4. மறைந்ததோ



More papers at www.testpapersfree.com

**B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி:**

தோசையைச் சுட்டுவிட்டுச் சட்னி அரைப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள் தேன்மொழி. அவள் இந்தியாவிலிருந்து சிங்கப்பூருக்கு வந்து மூன்றே மாதங்கள்தான் ஆகியிருந்தன. அவள் இங்கு உள்ளவர்களின் பரபரப்பான வாழ்க்கை முறைக்கு ஈடுகொடுத்து வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்து வந்தாள். இப்பண்பு அவளுடைய எஜமானியான திருமதி பாலாவுக்குப் பிடித்திருந்தது. காலை உணவைத் தயாரித்துக்கொண்டிருந்த வேளையில், "தேன்மொழி! என் புத்தகப்பை எங்கே? அதை உடனே எடுத்துக்கொண்டு வா!" என்று ரவிந்திரன் அதட்டிக்கொண்டிருந்தான்.

"எத்தனை முறை தேன்மொழியை 'அக்கா' என்று அழைக்குமாறு கூறியுள்ளேன். சிறு அலுவல்களுக்கு எல்லாம் அவளைத் தொந்தரவு செய்யாமல் நீயே செய்யலாம் அல்லவா?" என்று கடுஞ்சினத்தோடு அவனுடைய தாயார் கேட்டார். "இருக்கட்டும் அம்மா, நான் வேலையைச் செய்யத் தானே வந்திருக்கிறேன். குழந்தை என்னைக் கேட்காமல் வேறு யாரிடம் கேட்பான்?" என்று தேன்மொழி கூறினாள். வீட்டுக்கு வந்த பணிப்பெண்ணிடம் தன் தாயார் அன்போடு பழகுவதும், பரிவு காட்டுவதும், அவளுக்காகப் பரிந்து பேசுவதும் ரவிந்திரனுக்குப் பிடிக்கவில்லை. பணிப்பெண்ணிடம் உறவு முறை கொண்டாடுவதை அவன் விரும்பவில்லை.

ரவிந்திரன் ஐந்தாம் வகுப்பில் பயின்றுகொண்டிருந்தான். வழக்கறிஞரான அவனுடைய தந்தை அவன் கேட்டதெல்லாம் உடனுக்குடன் வாங்கித் தருவார். தான் விலையுயர்ந்த கைக்கடிகாரம், கணிப்பான் (calculator), கையடக்கத் தொலைபேசி முதலியவற்றுக்குச் சொந்தக்காரன் என்று அவன் பெருமை கொண்டான்.

ஒரு நாள் பள்ளி முடிந்து கவலையுடன் ரவிந்திரன் வீடு திரும்பினான். அவனை அன்புடன் விசாரித்தாள் தேன்மொழி. "நானே வருத்தமாக இருக்கிறேன். நீ வேறு நேரம் புரியாமல் வந்து பேசுகிறாய்! என் விலையுயர்ந்த கைக்கடிகாரம் எப்படியோ காணாமல் போய்விட்டது. உனக்கென்ன தெரியும் அதன் அருமை," என்று அவள் மேல் எரிந்து விழுந்தான்.

"கவலைப்படாதே, நான் அப்பாவிடம் பேசுகிறேன்," என்று தேன்மொழி கூறினாள். ரவிந்திரனின் தந்தை வந்ததும் அவள் அவரிடம், "ஐயா! ரவிந்திரனின் கைக்கடிகாரம் காணாமல் போய்விட்டது." உடனே அவனது தந்தை அவனை முறைத்துப் பார்த்தார்.



More papers at www.testpapersfree.com

உடனே தேன்மொழி, "அவனைத் திட்டாதீர்கள். என்னுடைய மாதச் **சம்பளத்தைப்** பிடித்துக்கொண்டு அவனுக்கு ஒரு புதிய கைக்கடிகாரத்தை வாங்கித் தாருங்கள். பாவம் குழந்தை!" என்றாள்.

தேன்மொழி கூறியது ரவிந்திரனின் மனதை நெகிழச் செய்தது. தான் தேன்மொழியிடம் மரியாதையில்லாமல் பேசியும், அவள் தன்னிடம் காட்டும் அன்பையும் தியாகத்தையும் கண்டு வியந்தான். தன் செயலை எண்ணித் தலை குனிந்தான். அன்றிலிருந்து ரவிந்திரன் தேன்மொழியிடம் அன்பாகவும் மரியாதையுடனும் நடக்கத் தொடங்கினான்.

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (8 மதிப்பெண்கள்)**

Q21. திருமதி பாலாவுக்கு எதனால் தேன்மொழியைப் பிடித்திருந்தது?

1. அவள் சிங்கப்பூருக்கு வந்து மூன்று மாதங்களாகியிருந்ததால்
2. அவள் பரபரப்புடன் காலை உணவை தயாரித்துக் கொடுத்ததால்
3. அவள் வேலைகளைச் சிறப்பாகச் செய்து வந்ததால்
4. அவள் இந்தியாவிலிருந்து வந்திருந்ததால்

Q22. ரவிந்திரன் ஏன் தேன்மொழியை 'அக்கா' என்று அழைப்பதில்லை?

1. அவள் வேறுநாட்டைச் சேர்ந்தவள் என்பதால்
2. அவள் தன்னுடன் பிறக்காதவள் என்பதால்
3. அவள் அன்னை அவளிடம் அன்பைப் பொழிந்ததால்
4. அவள் ஒரு சாதாரண வீட்டுப் பணிப்பெண் என்பதனால்

Q23. ரவிந்திரன் எதற்காக வீண் கர்வம் கொண்டான்?

1. அவனது தந்தை ஒரு வழக்கறிஞர் என்பதால்
2. தனக்குப் பணிவிடை செய்ய பணிப்பெண் இருந்ததால்
3. தான் மாளிகைப் போன்ற பெரிய வீட்டில் குடி இருந்ததால்
4. தன்னிடம் விலையுயர்ந்த பொருட்கள் இருந்ததால்



More papers at www.testpapersfree.com

Q24. ரவிந்திரன் எதை எண்ணி தலை குனிந்து வெட்கப்பட்டான்?

1. தன் தந்தை அவனைப் முறைத்துப் பார்த்ததை எண்ணி
2. தேன்மொழியை 'அக்கா' என்று அழைக்காததை எண்ணி
3. தேன்மொழியிடம் பணிவில்லாமல் நடந்துகொண்டதை எண்ணி
4. தான் பொறுப்பில்லாமல் தன் கடிகாரத்தைத் தொலைத்ததை எண்ணி

<u>சொற்பொருள்</u>

**வினா Q25-இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடுக. (2 மதிப்பெண்கள்)**

Q25. சம்பளத்தை

1. தொகையை
2. பணத்தை
3. சேமிப்பை
4. ஊதியத்தை



More papers at www.testpapersfree.com

Q26 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.

'ஆ' பிரிவு

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

**பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)**

| | | |
|---|---|---|
| Q26 | என் வீட்டின் அருகில் ஓர் ______________ இருக்கிறது. அதில் ஏராளமான மீன்கள் நீந்துவதைக் காணலாம். | Q26 ( ) |
| Q27 | அப்பா என் தம்பியுடன் விளையாடிக்கொண்டிருந்தார். அவர் அவனைத் தமது ______________ மீது அமரச் செய்தார். | Q27 ( ) |
| Q28 | அப்பா ______________ முடிந்து களைப்பாக வந்தார். தங்கை அவருக்குக் குளிர்பானம் தந்தாள். | Q28 ( ) |
| Q29 | பசியோடு அலைந்த நாய்க்கு இரண்டு எலும்புத் துண்டுகள் கிடைத்தன. உடனே, அது ஓர் எலும்புத் துண்டை ______________ தோண்டிப் புதைத்து வைத்தது. | Q29 ( ) |

| | |
|---|---|
| (1) குளி | (2) குழி |
| (3) தோல் | (4) பனி |
| (5) தோள் | (6) ஏறி |
| (7) ஏரி | (8) பணி |

/8



More papers at www.testpapersfree.com


**D7 <u>கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்</u>**


பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

# வேட்டை சைவ உணவகம்

## ஆரோக்கியமான வாழ்க்கைக்குச் சைவ உணவு!!!

| | | |
|---|---|---|
| இடம் | : | 10, ஆர்ச்சட் சாலை |
| தொலைபேசி எண் | : | 66775525 |
| நேரம் | : | காலை - 8 மணி முதல் |
| | | இரவு – 10 மணி வரை |







**உணவகத்தின் சிறப்பு வசதிகள்**

- தினமும் - சுடச் சுட இடியாப்பம்
- வார இறுதி நாள்களில் பேப்பர் தோசையுடன் வடை வாங்குவோருக்குப் பனிக்கூழ் இலவசம்!
- வீட்டுக்கு அனுப்பி வைக்கும் இலவச சேவையும் உண்டு!

கேரளாவிலிருந்து வரும் சமையல்
வல்லுநரின் அற்புதத் தயாரிப்பு
– ஆப்பம் & மோர்க்குழம்பு

பிள்ளைகளுடன் வரும் பெரியவர்
இருவருக்கு 20% கழிவு



பிறந்தநாள் கொண்டாட்டம்:
50 பேருக்கு மேல் வந்தால்,
உண்ணத் தனி அறையும் தரப்படும்;
சைவ கேக்கும் இலவசம்!!!



More papers at www.testpapersfree.com

**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**
**(10 மதிப்பெண்கள்)**

Q30. வேட்டை உணவகத்தின் சிறந்த உணவு வகை யாவை?

1. மோர்க்குழம்பு, வடை
2. இடியாப்பம், பேப்பர் தோசை
3. சைவ கேக், பனிக்கூழ்
4. ஆப்பம், மோர்க்குழம்பு

Q31. பிள்ளைகளுடன் வரும் பெரியவர்களுக்கு என்ன சலுகை வழங்கப்படும்?

1. இரவு பத்து மணிவரை உண்ணலாம்
2. பனிக்கூழ் இலவசமாகக் கிடைக்கும்
3. உண்ணும் உணவுக்கு 20% கழிவு கிடைக்கும்
4. ஆரோக்கியமான உணவு கிடைக்கும்

Q32. பிறந்தநாளைக் கொண்டாட 100 பேர் வந்தால் என்ன எதிர்பார்க்கலாம்?

1. இலவச சைவ கேக்கும், தனி அறையும்
2. குளிர் சாதன வசதி வழங்கப்படும்
3. வீட்டுக்கு உணவு அனுப்பி வைக்கப்படும்
4. கேரளா சமையல் வல்லுநரைச் சந்திக்கும் வாய்ப்பு

Q33. வேட்டை உணவகத்தின் சிறப்பு வசதிகள் யாவை? (4 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

/4



More papers at www.testpapersfree.com

**D8 சுயவிடைக் கருத்தறிதல்**
**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி:**

ஓர் ஊரில் சோமு கோபு என்ற இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். சோமுவிடம் இரண்டு விலையுயர்ந்த வைரக்கற்கள் இருந்தன. ஒரு நாள், அவன் தன் நண்பன், கோபுவிடம் சென்று, "நண்பனே! நான் வெளியூர் செல்ல வேண்டியிருக்கிறது. இந்த வைரக்கற்களை நான் திரும்பிவரும்வரை பாதுகாத்து வைத்திரு," என்று கூறி வைரக்கற்களைக் கோபுவிடம் ஒப்படைத்தான்.

"சோமு, நீ என்னை நம்பி வைரக்கற்களை ஒப்படைத்துள்ளாய். கவலையில்லாமல் சென்று வா. நான் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கிறேன்," என்று கோபு பதிலளித்தான். சோமு வெளிநாட்டிலிருந்து திரும்பியதும் கோபுவிடம் வைரக்கற்களைக் கேட்டான். கோபு ஒன்றும் அறியாதவன்போல், "வைரக்கற்களை ஒருபோதும் நீ என்னிடம் கொடுக்கவில்லை. என் மீது வீண் பழி சுமத்துகிறாய்," என்று கூறி விரட்டிவிட்டான். நம்பிக்கை மோசம் செய்த கோபுவின் செயலைக் கண்டு சோமு மிகவும் அதிர்ச்சியடைந்தான். கோபுவின் குணம் அறியாமல் பழகி மோசம் போய்விட்டோமே என்று அவன் மனம் வருந்தினான். இந்தப் பிரச்சனையைத் தீர்க்கச் சோமு மரியாதை ராமனிடம் சென்று முறையிட்டான்.

வைரக்கற்களை மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட கோபு நகைத் தொழில் செய்பவன் என்பதை மரியாதை ராமன் அறிந்தார். மரியாதை ராமன் கோபுவிடம், "இந்தப் பையிலுள்ள நூறு வைரக் கற்களைக் கொண்டு ஒரு வைரமாலை செய்துகொண்டு வா," என்று கூறினார். கோபுவும் அவற்றைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்பினான்.

கோபு வைரக்கற்களை எண்ணிப் பார்த்துத் திடுக்கிட்டான். நூறு வைரக்கற்களில் இரண்டு குறைந்தன. ஒரு கல் குறைந்தாலும் கடுந்தண்டனை கிடைக்குமே என்று அஞ்சினான். இறுதியாக, சோமுவிடம் மோசடி செய்த இரண்டு வைரக்கற்களையும் சேர்த்து மாலை செய்து சமாளிக்க முடிவெடுத்தான். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதபடி ஆகிவிட்டதே என்று வருந்தினான். ஒரு வாரம் கழித்துக் கோபு வைர மாலையை மரியாதை ராமனிடம் ஒப்படைத்தான். அவர் வைரக்கற்களை எண்ணிப் பார்த்தார். சரியாக நூறு வைரக்கற்கள் இருந்தன. அவர் சோமுவை அழைத்து, "இந்த மாலையில் உன் வைரக்கற்களை அடையாளம் காட்டு," என்றார். சோமுவும் சரியான வைரக்கற்களை அடையாளம் காட்டினான்.



More papers at www.testpapersfree.com

உடனே மரியாதை ராமன் வைரமாலையைச் செய்த கோபுவிடம், "நான் தொண்ணூற்று எட்டுக் கற்களைத்தான் உன்னிடம் கொடுத்தேன். இப்போது நூறு இருக்கிறதே! எப்படி?" என்று கேட்டார். உடனே அவன், "என்னை மன்னியுங்கள். நூறு வைரக்கற்கள் என்று கூறி என்னிடம் கொடுத்தீர்கள். அதில் ஒன்று குறைந்தாலும் தண்டனை கிடைக்குமே என்று பயந்து, நான் நண்பனிடம் மோசடி செய்த இரண்டு வைரக்கற்களையும் சேர்த்து மாலையைச் செய்துவிட்டேன்," என்று கூறி உண்மையை ஒப்புக்கொண்டான்.

தழுவல் : (மரியாதை ராமனின் மகத்தான தீர்ப்புகள் -வைரக்கல் வழக்கு)

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (22 மதிப்பெண்கள்)**

Q34. சோமு ஏன் வைரக்கற்களைக் கோபுவிடம் கொடுத்தான்? (2 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

Q35. கோபு சோமுவிடம் நம்பிக்கையாக என்ன கூறி வழி அனுப்பினான்? (2 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

Q36. சோமு ஏன் கோபுவின் செயலைக் கண்டு அதிர்ச்சியடைந்தான்? (3 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

/7



More papers at www.testpapersfree.com

Q37. வைர மாலையைச் செய்யும்போது கோபு ஏன் அச்சமடைந்தான்? (3 மதிப்பெண்கள்)

Q38. இப்பகுதியில் **எந்த வாக்கியம்** கோபு ஏமாற்ற எண்ணியபோதிலும் முடியாமல் போய்விட்டது என்ற கருத்தை உணர்த்துகிறது? (4 மதிப்பெண்கள்)

Q39. மரியாதை ராமன் திருடனை எப்படிக் கண்டு பிடித்தான்? (4 மதிப்பெண்கள்)

/11



More papers at www.testpapersfree.com

Q40. **'தப்பு செய்தால் தப்பிக்கமுடியாது'** என்ற உண்மையை இப்பகுதியில் உள்ள சான்றுகளைச் சுட்டிக்காட்டி நீ உன் நண்பருக்குக் குறிப்பு எழுது. (4 மதிப்பெண்கள்)

அன்புள்ள மணி,

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

இப்படிக்கு,

உன் நண்பன்

**முற்றும்**

4



More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

**SEMESTRAL ASSESSMENT 2**
**ANSWER KEY**

| | |
|---|---|
| **A1) வேற்றுமை (6ம)** | **B5) கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் (6ம)** |
| 1) 1 | 21) 3 |
| 2) 2 | 22) 4 |
| 3) 1 | 23) 4 |
| 4) 1 | 24) 3 |
| 5) 1 | |
| **A2) செய்யுள் (6ம)** | **சொற்பொருள்** |
| 6) 3 | 25) 4 |
| 7) 4 | |
| 8) 4 | |
| 9) 2 | |
| 10) 3 | |
| **A3) தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 ம)** | **C6) ஒலிவேறுபாடு (8 ம)** |
| 11) 2 | 26) 7 |
| 12) 1 | 27) 5 |
| 13) 2 | 28) 8 |
| 14) 3 | 29) 2 |
| 15) 1 | |
| | |
| **A4) முன்னுணர்வுக் கருத்தறிதல் (10 ம)** | **D7) கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் (10 ம)** |
| 16) 2 | 30) 4 |
| 17) 1 | 31) 3 |
| 18) 3 | 32) 1 |
| 19) 4<br>20) 1 | 33) வேட்டை உணவகத்தில் சுட சுட இடியாப்பமும் (1) மற்றும் வார இறுதி நாட்களில் பேப்பர் தோசையுடன் வடை வாங்குவோருக்கு இலவச பனிக்கூழும்(1) கிடைக்கும். மேலும் வீட்டுக்கு அனுப்பி வைக்கும் இலவச சேவையும் உண்டு(1). (மொ-1) |



More papers at www.testpapersfree.com

**D8) சுயவிடைக் கருத்தறிதல் (20ம)**

| | | |
|---|---|---|
| 34. | சோமு வெளியூர் செல்ல வேண்டும் என்பதால், வைரக்கற்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள கோபுவிடம் அவற்றைக் கொடுத்தான். | க: 1<br>மொ: 1 |
| 35. | கோபு, சோமு தன்னை நம்பி வைரக்கற்களை ஒப்படைத்ததால், கவலையில்லாமல் சென்று வரும்படியும் தான் பத்திரமாக அவற்றைப் பாதுகாப்பதாகவும் கூறி வழி அனுப்பினான். | க: 1<br>மொ: 1 |
| 36. | சோமு நம்பிக்கை மோசம் செய்த கோபுவின் செயலைக் கண்டும், கோபுவின் குணம் தெரியாமல் பழகி மோசம் போய்விட்டதையும் அறிந்து அதிர்ச்சி அடைந்தான். | க: 2<br>மொ: 1 |
| 37. | கோபு, வைர மாலையைச் செய்யும்போது இரண்டு வைரக்கற்கள் குறைந்திருந்ததாலும், மரியாதை ராமனிடம் கூறினால் தனக்குத் தண்டனை கிடைக்கும் என்று எண்ணியதாலும் அச்சமடைந்தான். | க: 2<br>மொ: 1 |
| 38. | இப்பகுதியில் "கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதபடி ஆகிவிட்டதே' என்ற வாக்கியம் கோபு ஏமாற்ற எண்ணியபோதிலும் முடியாமல் போய்விட்டது என்ற கருத்தை உணர்த்துகிறது. | க: 3<br>மொ: 1 |
| 39. | மரியாதை ராமன் தொண்ணூற்று எட்டுக் கற்களைத்தான் கொடுத்துக் கோபுவிடம் வைரமாலையைச் செய்யச் சொன்னான். இப்போது நூறு கற்கள் இருப்பதைக் கண்டு திருடனைக் கண்டு பிடித்தான். | க: 3<br>மொ: 1 |
| 40. | இம்மூன்று கருத்துகளும் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.<br>• கோபு நம்பிக்கை மோசம் செய்தான்.<br>• மோசடியை ஒப்புக்கொள்ள மறுத்தான்.<br>• ஆனால், இறுதியில் பேராசையாலும் பயத்தாலும் அவன் மாட்டிக்கொண்டான். | க: 3<br>மொ: 1 |

முற்றும்



More papers at www.testpapersfree.com